ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1777/33 - 2012 සැප්තැම්බර් මස 26 වැනි බදාදා - 2012.09.26

*1777/33 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள்**

பகுதி I

**178 ஆம் பந்தியை மாற்றியமைத்தல்**

அமைச்சரவையினால் 27.06.2012 ஆந் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவான 12/0745/523/025 ஆம் இலக்கமுடைய அமைச்சரவைப் பத்திரத்தின்படி, 1589/30 ஆம் இலக்க 20.02.2009 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பகுதி I இன் 178 ஆம் பந்தி பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

178. (i) எவரேனும் ஒரு அலுவலர் 57 வயதுக்கு மேல் சேவையில் இருப்பதற்கு விரும்புவாராயின் சேவையை நீடிப்பதற்கான கோரிக்கை எதுவும் இன்றி கட்டாய ஓய்வு பெற வேண்டிய வயதுவரை சேவையில் இருத்தல் முடியும்.

(ii) 55 வயது தொடக்கம் 60 வயது வரையான காலத்தில் அலுவலர் விரும்பினால் 3 மாதகால முன்னறிவிப்பின்படி ஓய்வு பெறுவதற்கான உரிமையை உடையவராவர்.

(iii) 57 வயதினைக் கடந்த அலுவலர் ஒருவரின் செயலாற்றுகை மற்றும் சேவை நிலைமைகள் திருப்திகரமானதாக இல்லை என நியமன அதிகாரி தீர்மானிப்பாராயின், அதற்கு எதிராக மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு அவ்வலுவலருக்கு 6 மாத கால அவகாசம் வழங்கப்பட்டு பின்னர் ஓய்வுபெறச் செய்வதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும்,

(iv) அவ்வலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முறைகள் முடிவுறாமல் இருக்குமிடத்து அல்லது அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கை முறைகள் உத்தேசிக்கப்பட்டு இருக்குமிடத்து அவ்வலுவலரது ஓய்வு பெறுகை ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவுக்கு உட்பட்டதாதல் வேண்டும். அரசாங்க அலுவலர்கள் ஓய்வு பெறுவதற்கான வேண்டுகோளை முன்வைக்கும் போது அத்தகைய விடயங்களை திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவர் அல்லது அவர்கள் இருவரும் நியமிப்புச் செய்யும் அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவருவது அவர்களின் கடமையாகும்.

(v) அலுவலர் ஒருவரது ஓய்வு பெறுகை, நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அவர் ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றைத் தேவைப்படுத்தும் வகையில் துர்நடத்தை ஒன்றைப் புரியுமிடத்து, ஓய்வு பெறுவதற்கான கட்டளை நியமிப்புச் செய்யும் அதிகாரியினால், அத்தகைய துர்நடத்தை ஓய்வுபெறுகை நிகழ்வுறு திகதிக்கு முன்னர் நியமிப்புச் செய்யும் அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டால், சாதாரண ஓய்வுபெறுகை கட்டளையிலிருந்து ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுகை கட்டளையாக மாற்றப்படும். அத்துடன் அவர் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் அக்கட்டளையின் பிரதி ஒன்றை சேர்க்க வேண்டும். அல்லது சேர்ப்பிக்க வேண்டும்.

(vi) அரசாங்க அலுவலர் ஒருவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் முடிவுறா நிலை இருக்கவில்லை அல்லது அவருக்கு எதிராக உத்தேசிக்கப்பட்டு இருக்கவில்லை எனும் அடிப்படையில் அவருக்கு நியமிப்புச் செய்யும் அதிகாரி சாதாரண ஓய்வு பெறுகையை வழங்குமிடத்து, அத்தகைய முடிவுறாநிலை ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது உத்தேச ஒழுக்காற்று நடவடிக்கை நியமிப்பு செய்யும் அதிகாரிக்குக் கொண்டுவரப்பட்டால் சாதாரண ஓய்வுபெறுகை வழங்கப்பட்ட பின்னரும் ஓய்வுபெறுகை நிகழ்வுறு திகதிக்கு முன்னரும் நியமிப்புச் செய்யும் அதிகாரி சாதாரண ஓய்வு பெறுகையை ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுகையாக மாற்றி அத்தகைய கட்டளையின் பிரதி ஒன்றை சம்பந்தப்பட்ட அலுவலரிடம் சேர்க்க வேண்டும் அல்லது சேர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,


ரி.எம்.எல்.சி.சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05,

2012 செத்தெம்பர்

10-531

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*